**FRIDAY SERMON/** வெள்ளிக்கிழமை குத்து.ஃபா

**(04 AUGUST 2017) 11 DHUL QADDAH / 1438 HIJIRA**

## SURA AL- BAYYINA (Chapter: 98)

## சூரா: அல்பய்யினா (அதிகாரம்:98)



### HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு த~`;ஹுதும் தஅவ்வும் அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

1.அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்.

2.வேதக்காரர்களிலும், முஷ்ரிக்குகளிலும் எவர்கள் நிராகரிக்கின்றார்களோ, அவர்கள் தங்களிடம் தெளிவான ஆதாரம் வரும்வரை (தம் வழிகளிலிருந்து) விலகுபவர்கள் அல்லர்.

3.அல்லாஹ்விடமிருந்து வந்த தூதர், அவர்களுக்கு பரிசுத்தமான ஆகமங்களை ஓதிக்காண்பிக்கின்றார்.

4.அவற்றில் நிலையான சட்டதிட்டங்கள் வரையப்பட்டுள்ளன.

5.எனினும் வேதக்காரர்கள் அவர்களுக்குத் தெளிவான (இந்த) ஆதாரம் வந்த பின்னரேயன்றி அவர்கள் பிளவுப்படவில்லை.

6.அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக, பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும். மேலும் தொழுகையை அவர்கள் நிலை நாட்ட வேணடும். மேலும் “ஜகாத்தை” அவர்கள் வழங்க வேண்டும் என்பதைத் தவிர அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இது தான் நேரானமார்க்கமாகும்.

7.நிச்சயமாக வேதக்காரர்களிலும் முஷ்ரிக்குகளிலும் எவர்கள் நிராகரிக்கின்றார்களோ, அவர்கள் நரக நெருப்பில் இருப்பார்கள். அதில் என்றென்றும் இருப்பார்கள். இத்தகையவர்கள்தாம் படைப்புகளில் மிக்க செட்டவாடகள் ஆவார்கள்.

8.நிச்சயமாக எவர்கள் “ஈமான்” கொண்டு நற்செயல்கள் செய்கின்றார்களோ அவர்கள் தாம் படைப்புகளில் மிக மேலானவர்கள்

9.அவர்களுடைய நற்கூலி, அவர்களுடைய இறைவனிடத்திலுள்ள அத்னு என்னும் சொர்க்கச் சோலைகளாகும். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டு இருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்; அல்லாஹ்வும் அவர்களைப் பற்றி, திருப்தி அடைவான்.அவர்களும் அல்லாஹ்வைப்பற்றி திருப்தி அடைவார்கள்.தன் இறைவனுக்குப் பயப்படுகின்றாரோ அத்தகையவருக்கே இந்த மேலான நிலை உண்டாகும்.”

இறை செய்திகளிலிருந்து விலகிச் செல்போர்களுக்கும் உண்மையை உணர்ந்தப் பின் அதை மறுப்போர்களுக்கும் இச்செய்தி பயனளிப்பதில்லை. அந்த இறைச்செய்திகளுக்கு தெளிவானதும் ஆற்றல் வாய்ந்ததுமான அத்தாட்சிகளிருந்தால் கூட அவர்கள் அதை ஏற்றுக்கொள்வதில்லை. காரணம் அவர்கள் உண்மை என்னும் ஒளியை நிராகரிப்போர்களாவார்கள். இவ்வழியில் அவர்கள முன் செல்வது எதற்கு? அது அவர்களை எட்ட வைப்பது துரதிர்ஷ்டத்தின் பாலாகும். தெளிவானதும் ஆற்றலுடையதுமான அத்தாட்சிகளை அவர்களுக்கு முன்னால் சமர்ப்பித்தால்க் கூட அதை அவர்கள் அங்கீகரித்துக் கொள்வதில்லை. நெறியான பாதையை மக்களுக்கு சுட்டிக்காட்டும் இம் மதம் மிக எளிதாகும். **அல்லாஹ்வை வணங்க வேணடும், அவனுக்காக தொண்டு செய்ய வேண்டும்.** அவன் உண்மையும் நேர்மையுமான இறைவனாகயிருக்கின்றான். தூய்மையும் களங்கமற்றதுமான இதயத்துடன், பிராத்தனைவழியாக அவனிடம் தொடர்பு கொள்ளுங்கள். அத்தகைய பிராத்தனைகள் நேர்மையுடைதாகயிருக்க வேண்டும். அனைத்து மக்களுக்கும் தொண்டு செய்வதற்காக நீங்கள் உங்களையே சுயம் சமர்பித்துக் கொண்டு கனிவுடனும் கடமையுடனும் செயலாற்றுங்கள். அல்லாஹ்வின் அனைத்து படைப்பினங்கள் மீதும் அன்பையும் பண்பையும் வைத்துக் கொண்டபின்னவே இத்தகைய செயல்களில் ஈடுபட்டுக் கொள்ள வேண்டும். எவ்விதவித்தியாசவுமின்றி அல்லாஹ் நம்மை அனைவரையும் நேசிக்கின்றான். அதனால், நமக்கு, நம்மைப் போன்றவர்களிடம், மாறான ஒரு எண்ணம் இருக்க கூடாது. நிச்சயமாகவும் இருக்கக் கூடாது. அதற்கு மாறாக செயல்பட்டால் அது அல்லாஹ்வின் அருளை மறுப்பதை போன்றதாகிவிடும். நம்பிக்கையும் நன்மை நிறைந்த வாழ்கையும் நம்மை நேரடியாக வாழ்கையின் இலட்சியத்தின் பால் கொண்டு செல்கின்றது. அதாவது ஒளிமயவும் நிரந்தரவுமான சொர்க்கச் சோலைகளை அடைவதறக்கும், தம்மை படைத்தவனின் முன்னால் ஆன்மாவை மகிழவைப்பதற்க்கும், ஆனந்தத்தால் ஊஞ்சலாடிக்கொள்வதற்க்கும், இறை அனுபவங்களை ஒன்றுக்கொன்று பகிர்நது கொள்வதற்க்கும் அவர்களுக்கு முடிகின்றது. அதாவது அவர்களின் ஆன்மாவு, அல்லாஹ்வைப்பற்றி திருப்தி அடைந்துவிடவும் அதைப்போன்றே அல்லாஹ், அவர்களைப் பற்றி திருப்தி அடைந்து விடவும் செய்கின்றான்.

இந்த மகத்தான மகிழ்ச்சியையும் திருப்தியையும் அதாவது ஒன்றுக்கொன்று இணைந்திருக்கும் இந்த திருப்தியினை ஒரு உதாரணம் வாயிலான மேலும் நன்றாக உணரயியலும் என எண்ணுகின்றேன்.

ஒரு தாய் தம் குழந்தையை நேசிக்கின்றாள். அக்குழந்தைக்கு தேவையானதனைத்தயும் வழங்கித் கொள்கின்றாள். இச் சமுதாயத்தில் மிக நல்ல முறையில் வாழ்ந்துக்கொள்வதற்கான வசதிகளையாவும் தம் குழந்தைக்காக உருவாக்கிக்கொள்கின்றாள். மட்டுமின்றி அத்தாய், தம் குழந்தைகளுக்கு தேவையான அறிவுரைகளையும் மற்றும் அவசியமானவற்றையும் அளித்துக் கொள்கிறாள். இவையாவும் அக் குழந்தை நன்றியுடன் பெற்றுக்கொள்கிறது. அதை பயன்படுத்திக்கொள்கின்றது. தன் தாயாரின் அறிவுரைகளுக்கு உகந்த முறையில் தம் வாழ்க்கையை அமைத்து, செயல்படவும் செய்கின்றது.

அக்குழந்தை மிக நன்கு விரும்பும் உணவுப்பொருட்களை தாயிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பொழுது, அக் குழந்தை மிக்க மகிழ்ச்சியடைகின்றது. அது வாயிலாக அத் தாய் அடையும் திருப்தியும் மகிழ்ச்சியும் கொஞ்ச நஞ்சமல்ல. தாயாரின் அத்தகைய மகிழ்ச்சியும் திருப்தியும் அக் குழந்தையை ஈர்த்துக் கொள்கின்றது. சுருக்கமாக, அத் தாய்க்கு குழந்தைக்கு இடையில் ஆனந்தவும் மகிழ்சியும் பரவி விடுகின்றது. இத்தகையிலான அன்பும் ஆனந்தவும், தன்னை படைத்த இறைவன் மீது வைத்து நம் ஆன்மாவை ஒளிமயமாக்க வேண்டும்.

உறுதியான நம்பிக்கை வாயிலாக, இக் கூறிய உன்னதமான நிலையை அடைவதற்கு நமக்கு கடினமான முயற்ச்சிகளை மேற்கொள்வோம். நன்மை நிறைந்த சிந்தனைகளாலும் நன்மை வாய்ந்த செயல்களாலும் அல்லாஹ் விடமிருந்துள்ள பாராட்டுகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

வசனங்கள்: 1, 2

**“வேதக்காரர்களிலும், முஸ்ரிக்குகளிலும் எவர்கள் நிராகரிக்கின்றார்களோ,அவர்கள் தங்களிடம் தெளிவான ஆதாரம் வரும்வரை (தம் வழிகளலிருந்து) விலகுபவர்கள் அல்லர். அல்லாஹ்விடமிருந்து வந்த தூதர் அவர்களுக்கு பரிசுத்தமான ஆகமங்களை ஓதிக் காண்பிக்கின்றார.”**

a,வேதக்காரர்கள் என இங்கு குறிப்பிட்டிருப்பது யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் ஆகும். அவர்களுக்கு வேத நூல்கள் அளிக்கப்பட்டிருந்தது. நமது தூய தூதர் முகம்மது (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது போன்று! யூத-கிறிஸ்தவ வேத நூல்களின் அடிப்படை நோக்கம் என்பது, இந்த மகானான தூதரின் வருகையைக் குறித்து நற்செய்தி விடுப்பதற்கும் அன்னாரை அங்கீகரித்துக் கொள்ள அம்மக்களை ஆயத்தமாக்கி கொள்வதற்குமாகவே இருந்தது. அதாவது யூதர்களின் பரிசுத்த வேத நூல் வாயிலாக, ஹஸ்ரத் முகம்மது (ஸல்) அவர்கள் குறித்து அம்மக்களுக்கு அல்லாஹ், வாக்குறுதி அளித்திருந்தான். அதாவது அல்லாஹ், அவர்களின் சகோதரர்களுக்கிடையிலிருந்து மூஸா (அலை)மைப் போன்று ஒரு தூதரை தோற்றுவிப்பான் என வாக்குறுதி அளித்திருந்தான். காரணம் அரபிகள் அவர்களின் சகோதரர்களும் கஸின்சுகளும் (cousins) ஆவார்கள். பைபிளில் இது சம்பந்தமாக கூறியிருப்பது, அதாவது **“என் வார்த்தைகளை அவனுடைய வாயில் வைப்பேன். நான் கட்டளையிடுவது அனைத்தும் அவன் அவர்களுக்கு சொல்வான்”**(இணைச்சட்டம்18:18) ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்கள் ஒரு ஆறுதலளிப்பவரின் வருகையைக் குறித்து தீர்க்கதரிசனம் செய்திருந்தார். வாக்களித்திருந்தார். அன்னாரின் பெயரினையும் கூறியிருந்தார்.(யோவான், 14:26, 15:26, 15:17)

உண்மையான மதத்தை வேதக்காரர்கள் மறுத்துவிட்டிருக்கின்றன. அதை அவர்கள் மறுத்தப்பின் பல வழியாக பிரிந்தனர். அந்த தூதர் தோன்றும் பொழுது அத்தூதரின் உண்மையை அன்னார் நிரூபித்துக்கொள்ள வேண்டும் என அவர்கள் கூறினார்கள். ஆனால் வாக்களிக்கப்பட்ட தூதர் அவர்களுக்காக, முஹம்மது (ஸல்) வின் வடிவில் தோன்றிய போது, அவர்கள் அன்னாரை நிராகரித்துக் கொண்டனர். காரணம் உண்மையில், அவர்கள் உண்மையை தேடிக்கொள்ள வில்லை. அவர்கள் அவர்களின் உடல்விருப்பங்களை மட்டுமே பின்பற்றிக் கொண்டனர்.

b, கடந்த காலகட்டங்களில், பிம்பங்களை வணங்கியிருந்தோர்கள் அதாவது அல்லாஹ்வை கூடாமல் மற்று உருவவணக்கங்கள் செய்திருந்தோர்களும், தேவதைகளின் மீது நம்பிக்கை வைத்திருந்தோர்களும் வேத நூல்களை ஏற்றுக்

கொள்ளவில்லை. தெளிவானதும் ஆற்றல் வாய்ந்ததுமான ஒரு அத்தாட்சி கிடைத்து கொண்டால், அதை உணர்ந்து கொள்ளவேண்டியதும் அங்கீகரித்துக்கொள்ள வேண்டியதும் அவர்களின் கடமையாகயிருந்தது. தூய தூதர் முகம்மது (ஸல்) அவர்கள் இறைச்செய்தியுமாக தோன்றியபோது அவர்கள் அன்னாரையும் அன்னாரின் செய்தியையும் நிராகரித்துவிட்டார்கள். இது மிக தெளிவாக நம்மை கற்பிப்பது, உண்மையில் அவர்கள் உண்மையை தேடுபோர்களாகயிருக்கவில்லை. மாறாக, அவர்கள் தங்களின் சுய விருப்பங்பளுக்கு ஏற்றவர் வாழ்ந்துகொள்ளவே ஆசைப்பட்டனர்.

c, தெளிவானதும் ஆற்றல் வாய்ந்ததுமான அத்தாட்சிகள் அதாவது தூய தூதர் முகம்மது (ஸல்) அவர்களின் வாழ்கை, ஒரு தனிநபர் என்ற நிலையிலான அன்னாரின் மகத்துவம், அன்னாரின் போதனைகள் போன்றவை மனுகுலத்திற்கு தெளிவான அத்தாட்சிகளாகயிருந்தது. இவையாவும் ஒரு மனிதன் என்ற நிலையில் அன்னாரின் மகத்துவத்திற்கு உகந்த சான்றுகளாகும். ஒரு முழுமைப்பெற்ற தூதர் என்பதற்கு அது போதுமான அத்தாட்சிகளாகும். எல்லா அர்த்தத்திலும் உலகம் இன்று வரையில் கண்டுகொள்ளாத ஒரு முழுமைப்பெற்ற மனிதர் என்பதற்கான சான்றுகள் முகம்மது (ஸல்) அவர்கள் மூலமாக தென்பட்டுக்கொண்டது. சுருக்கமாக, அன்னார் ஒரு முழுமைப்பெற்ற முன்மாதிரியான மனிதனாகவே திகழ்ந்தார்.

வசனம் - 4

## “அவற்றில் நிலையான சட்டதிட்டங்கள் வரையப்பட்டுள்ளன”

அதில் நெறியான கருத்தை வரையப்பட்டுள்ளது. நெறிதவறிய பாதையினை சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.சரியும் தவறும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அல்லாஹ்விடமிருந்துள்ள இந்தநூலில் நிலையானதும் நெறியானதுமான வழியுமான சட்ட திட்டங்களை வரையப்பட்டிருக்கின்றது. அல்லாஹ், நம் வாழ்க்கையை எவ்வாறு முன் கொண்டு செல்ல வேண்டும் என்பதைக் குறித்தும் கற்ப்பித்திருக்கின்றான். நம் வாழ்க்கையை நமக்கு எப்போது எவ்வாறு எளிதாக்கிவிடலாம், சரியான முறையிலாக்கி விடலாம், இறை அச்சத்திலும் நேர் வழியிலுமாக்கி விடலாம் என்பதையும் அது நம்மை கற்ப்பிக்கின்றது. நமது

இதயங்களில் அல்லாஹ்வின் மீதான அன்பை எப்போதும் எவ்வாறு நிலை நாட்ட வேண்டும் என்பதையும் அதை சுட்டிக்காட்டுகின்றது.

வசனம் - 5

**“வேதக்காரர்கள் அவர்களுக்கு தெளிவான (இந்த) ஆதாரம் வந்த பின்னரேயன்றி அவர்கள் பிளவுபடவில்லை.”**

தேவதைகளை வணங்குபோர்களைவிட மேலான கடமைகள் வேதகாரர்களுக்கு இருக்கின்றது. அவர்களுக்கு முன்னெச்சரிக்கை கிடைத்ததுண்டு. அவர்களுக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாடுகள் வாயிலாக, சுயம் ஆயத்தமாகிக்கொள்வதற்க்கான வாய்ப்பும் கிடைத்தது. இவையாவும் கிடைத்திருந்தும்அதாவது தெளிவானதும் ஆற்றல் வாய்ந்ததுமான அத்தாட்சிகள் இஸ்லாம்வழி அவர்களுக்கு கிடைத்திருந்தும் அவர்கள் அதை தூக்கிவீசினார்கள். இம்மதம், அதாவது இஸ்லாம் இல்லாமலிருந்திருந்தால் உங்களின் கருத்துப்படிப் பின்னர் என்னயிருந்திருக்கும்? மதசார்பின்மையாகயிருந்திருக்குமோ? மதசடங்குகளும் மத ஆசாரங்களும் இல்லாமல் இருந்திருக்குமோ?

நிதந்தரமான மூன்று தத்துவங்களை நான் எடுத்துரைக்கின்றேன். இவை எல்லா விஷயங்களுடையவும் சுருக்கமாகும். அது கீழ் கூறும் வசனத்தின் விளக்கம் வழியாக தெளிவுப்படுத்துகின்றேன்.

வசனம் - 6

**“அல்லாஹுவுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக, பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும். மேலும் தொழுகையை அவர்கள் நிலை நாட்ட வேணடும். மேலும் “ஜகாத்தை” அவர்கள் வழங்க வேண்டும் என்பதைத் தவிர அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இது தான் நேரானமார்க்கமாகும்.”**[1]

**மதத்தின் நிதந்தரமான மூன்று தத்துவங்கள்**

**(1)** **பரம்பொருளாகிய அல்லாஹ்விடம் நேர்மையான பக்தியை வைத்துக்கொள்ள வேண்டும்.**

**(2)** **பிரார்த்தனையும் இறைதுதிகளும் மனிதனை ஆன்மீக உலகின்பாலும் இறைவன்பாலும் எட்டவைக்கின்றது.**

**(3)** **இறைப்படைப்புகளுக்கு மனம்திறந்து தொண்டு செய்யவேண்டும். அது ஜக்காத்து வழியாகவும் நன்மை நிறைந்த செயல் வழியாகவும் ஆகவேண்டும்.**

வசனம் - 7

**"நிச்சயமாக வேதக்காரர்களிலும் முஷ்ரிக்குகளிலும் எவர்கள் நிராகரிக்கின்றார்களோ, அவர்கள் நரக நெருப்பில் இருப்பார்கள். அதில் என்றென்றும் இருப்பார்கள். இத்தகையவர்கள்தாம் படைப்புகளில் மிக்க செட்டவாடகள் ஆவார்கள்."**

நன்மையும் தீமையும் பகுத்தறிவதற்க்கான ஆற்றல் இருந்தும் ஒருவர் உண்மையை வேண்டுமென்றே நிராகரித்துக்கொண்டால், ஏனைய மக்களிடத்தில் நீதியுடன் செயல்ப்பட்டுக்கொள்ளாமலிருந்தால், புத்திதிறன்வழங்கி அருளுக்குரியவராக்கி வைத்துள்ள அவர் செய்வது மிக பெரிய தவறாகும். அது பெரிய பைத்தியமாகும். அவரது இச்செயலின் விளைவாக அவர் சென்றடைவது தண்டனைகளின்பாலாகும். உருவ வணக்கம் செய்யும் அனைவர்களுக்கும் இத்தண்டனை பாதகமாகும். அவர்கள் இப்ராஹீம் (அலை) மின் சந்ததிகள் என்று கூறிக்கொண்டால்க்கூட இயேசு வழியாக இரட்சிப்பை பெற்றுவிட்டோம் என்றுகூறினால்க்கூட! நாங்கள் தேவதைகளை வணங்குவோர்கள் என அவர்கள் உரிமை கோரினால்க்கூட! அல்லாஹ்வின் பார்வையில் மகத்துவம் வர்க்கத்திலோ, நம்பிக்கையிலோ அல்ல. மாறாக புத்தி திறனும் நன்மை வாய்ந்த நற்ச்செயல்களிலுமாகும். அச்செயல்கள் நேர்மையாக இருக்கவேண்டும் அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான். நிச்சயமாகவும் இறை நோக்கத்தில் உங்களில் மிக சிறந்தவர், முற்றிலும் இறையச்சமுடையவர் ஆவார்.

வசனம் - 8

**“நிச்சயமாக எவர்கள் “ஈமான்” கொண்டு நற்செயல்கள் செய்கின்றார்களோ அவர்கள் தாம் படைப்புகளில் மிக மேலானவர்கள்.”**

இவ்வசனத்தை நமக்கு மேல் கூறிய வசனத்துடன் தொடர்புபடித்திப்பார்ப்போம். ஒருவர் தம் வாழ்க்கையை மிக நல்ல நிலையில் கொண்டு செல்கின்றார். நற்செயல்களில் மூழ்கியிருக்கின்றார். அல்லாஹ் அவருக்கு அளித்திருக்கும் நேரத்தை நல்ல நிலையில் வினியோகிக்கின்றார். மறு உலகிற்க்கு தேவையானவையை அனைத்தும் செய்கின்றார். அவரின் மரணத்திற்க்கு பின் இதை விட ஒரு மேலான வாழ்க்கையில் நுழைகின்றார்.

வசனம் - 9

**“அவர்களுடைய நற்கூலி, அவர்களுடைய இறைவனிடத்திலுள்ள அத்னு என்னும் சொர்க்கச் சோலைகளாகும். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டு இருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்; அல்லாஹ்வும் அவர்களைப் பற்றி, திருப்தி அடைவான்.அவர்களும் அல்லாஹ்வைப்பற்றி திருப்தி அடைவார்கள்.தன் இறைவனுக்குப் பயப்படுகின்றாரோ அத்தகையவருக்கே இந்த மேலான நிலை உண்டாகும்.”**

அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுக்கொள்தல் என்பது மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இது மோட்சத்திற்க்கான ஒரு வழியாகும். இந்த மகிழ்ச்சி என்பது, கொடுத்தபின் பெற்றுக்கொள்ள வேண்டியவையாகும். அதாவது இது ஒன்றுக்கொன்று இணைந்திருக்கும ஒரு விஷயமாகும். அல்லாஹ்விடமிருந்து மனிதனின் பாலும், மனிதனிடமிருந்து அல்லாஹ்வின்பாலும், அல்லாஹ்வின் விருப்பத்தை ஒருவருக்கு பகுத்தறிய முடிந்தால் அவர் இரட்சிப்பை பெற்றார் என அவருக்கு உரிமை கோரிவிடலாம் . அல்லாஹ்வின் மீதான பயம் உருவாகுவது அதிகமளவிலான அன்பும் ஆதரவும் செலுத்துவதன் மூலமாகும். அதுவே உண்மையான பயம். அப்பயம் நமக்குள்ளிலிருந்தே உருவாக வேண்டும். இறைசட்டங்களுக்கு எதிராக செயல்படாமலிருப்பதற்கும் அல்லாஹ்வின் பரிசுத்த விருப்பங்களுக்கு மாறாகாமலிருப்பதற்கும் நமக்கு அது

உதவி புரிகின்றது. அத்தகைய பயம் நம்மிடம் தோன்றிக்கொள்வது அல்லாகின் மீதான ஆழமான அன்பு மூலமாகும். அப்பயம் நம் உள்ளத்தின் ஆழங்களிலிருந்து உயர்ந்து வரவேண்டும். ஆந்நேரம் இந்த அன்பு வாயிலாக நமக்கு மேலும் மேலும் விஷயங்களை உணரயியலும் . அதாவது அல்லான் இறைவனாகின்றான் என்றும் அவன் அனைத்தும் காண்கின்றான் என்றும் அவனது படைப்பினங்களையாவும் அவன் பாதுகாத்துக் கொண்டிருத்தின்றான் என்றெல்லாம் இந்த பகுத்தறிவு நம் உள்ளத்தின் ஆழங்களிலிருந்து வளர்ந்து வரவேண்டும்.

சூரா: அல்பய்யினாவின் விளக்கத்தை முழுமையாக உணர்ந்து கொள்ள அல்லாஹ் நம் அனைவருக்கும் உதவிபுரிவானாக! முனிதனைப் பொறுத்தவரையில் அல்லாஹ்வின் அடைந்துக்கொள்ளுதல் என்பது ஒரு சிறிய விஷயமல்ல அதை உணரவேண்டும். அல்லாவின் மீதான ஒரு உண்மையான அன்பு ஒரு நம்பிக்கையாளரின் இதயத்திலிருந்தால் அவரது இலட்சியத்தை அடைய அவர் அனைத்தும் செய்வார் அதைப் போன்றே அல்லாஹ் அவனது அதிகாரத்தில் உட்பட்டதனைத்தையும் செய்வான். நம்பிக்கையாளர் அவனிடம் இணைந்திருப்பதற்காக அல்லாஹ், அவருக்கு தேவையானதனைத்தும் செய்வான். அது வாயிலாக அவனது விருப்பங்கள்யாவும் நிறைவேறும். அது இவ்வுலகிலானாலும் சரி மறு உலகிலானாலும் சரி! ஆமீன்.


**Issued by:**

Jamaat Ul sahih Al Islam

Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817